**தேசிய வடிவமைப்பு நிலையம் - 2018**

-------------------------------------------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிலையத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிலையத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிலையத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிலையத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச்

சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிலையத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ள தலைப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிலையத்தினால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலக கட்டிட நிர்மானத்திற்குரிய ஒப்பந்த முற்பண பதிவேடு. ஒப்பந்த செலவு நிறுத்தி வைக்கப்படும் பதிவேடு, நடைமுறை வேலை போன்ற பதிவேடுகள் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | இப்பதிவேட்டை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்த நிர்வாகத்திற்குரிய இப்பதிவேடு பராமரித்து பேணப்பட வேண்டும். வேறுபாட்டிற்கு காரணம் அகற்றப்பட்ட புத்தக கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டமையாகும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம பெறுமதி | அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| **நிலையான சொத்துக்கள்** | **94,355,913** | **76,116,899** | **18,239,014** | வேறுபாட்டிற்கு காரணம் அகற்றப்பட்ட சொத்துக்கள் கணக்கேடுகளிலிருந்து அகற்றப்படாமையாகும். | வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| | விடயம் | தோகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் | 16,500,578 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கோரி அனுப்பிய போதும் கிடைக்கவில்லை. | மீதி உறுதிப் படுத்தும் கடிதங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை வேண்டும். |
| (ஆ) | வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகள் | 5,040,775 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் கோரி அனுப்பிய போதும் கிடைக்கவில்லை. | மீதி உறுதிப் படுத்தும் கடிதங்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 16,500,578 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளில் 1 ஆண்டிற்கு குறைந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14,881,063 ஆகவும், 1 ஆண்டிற்கும் 2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 615,776 ஆகவும், 2 ஆண்டுகளிற்கும் 3 ஆண்டுகளுக்கு் இடைப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,694 ஆகவும் 3 வருடங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 992,044 ஆகவும் இருந்ததுடன், இந்த கடன் மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | இந்த அறவிடவேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | அறவிட வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 5,040,775 கூட்டுத்தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் 1 ஆண்டிற்கு குறைந்த ரூபா 3,980,543 ஆகவும், 1 ஆண்டிற்கும் 2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 750,225 ஆகவும், 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 310,007 ஆகவும் இருந்தது இந்த கடன் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | இது தொடர்பாக ஆராய்ந்து எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். | செலுத்த வேண்டிய மீதிகளின் சரியான தன்மை தொடர்பாக ஆராய்ந்து தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

**-----------------------------------------------------------------------------------------------------------**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 13 ஆம் பிரிவின் 7 ஆம் உப பிரிவின் (ஐ) மற்றும் (ஓ) பந்திகள் | இப்பிரிவின் பிரகாரம் நிலையத்தின் 2016 ஆம் ஆண்டிற்காக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைக்காக பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கு துரிதமாக பதில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிச் சட்டத்தின் பிரகாரம் 03 மாதங்களுக்குள் பதில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய வடிவமைப்பு நிலையத்துடன் இணைந்த நிறுவன சட்டத்தின் iv ஆம் பிரிவு (i) 82(அ) பிரிவு | கைப்பணியாளர்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக விரல் மூலப்பொருள் மாற்றீடு தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் புதிய உற்பத்தி செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 1,160,000 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு 03 ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 536,000 செலவிடபட்டு செம்மண்ணுடன் அண்மித்த பொருட்களை வர்ணமாக்கும் நடவடிக்கைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது டன் மற்றைய 02 ஆராய்ச்சிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்நடவடிக்கை வெவ்வேறு காரணங்களின் பேரில் 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. | செயல்நடவடிக் கைத் திட்டத்தின் இலக்குகளை ஆண்டில் அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) 82(ஆ) பிரிவு | தோல்பொருட் கைத்தொழில் உற்பத்திப் பொருட்களைப் பிரசித்தப்படுத்தல் மற்றும் தோல் பொருள் கைத்தொழில் உற்பத்திக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை அபிவிருத்தியின் கீழ் ரூபா 10,400,000 ஆன நிதி ஏற்பாடு செலவிடப்பட்டு மீளாய்வாண்டில் 07 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அச்செயற்பாடுகளுக்கு இடையே 05 செயற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருந்தது டன் எஞ்சிய 02 செயற்பாடுகளை நிறைவேற்று வதற்காக நிதி ஏற்பாடு செலவிடப்பட்டிருந்த போதிலும் அதன் நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் கணக்காய்வுப் பிரிவிற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படாமையால் அச் செயற்பாடுகளில் செயலாற்றலை பரீட்சிப்பதற்கு முடியவில்லை. | குறித்த தகவல்களை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். | கணக்காய்விற்கு கோரும் எழுத்து மூலச் சான்றுகளை கணக்காய்வு சந்தர்ப்பத்திலேயே சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் போதியளவு எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | (ii) 82(ஊ) பிரிவு | மூலப் பொருட்களுக்காக தர சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடுகள் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடைமுறைப்படுத்துவதற்கு நிலையம் தவறியிருந்தது. | 2019 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் | திட்டமிடப்பட்டதன் பிரகாரம் சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br><br>(I)நிதிப்பிரமாணம் 128(1)(ஆ) | கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உரிய ஆவணங்கள் பரீட்சிக்கப்பட்டு பரிந்துரைத்து, அங்கீகரித்து கொடுப்பனவு | ஒவ்வொரு பொழிப்பு பட்டியலும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை மொத்த பொறுமதியும் உறுதிப்படுத்தப்பட | பட்டியல் பரீட்சிக்கப்பட்டு அங்கீகாரம் மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 17,047,940 ஆன கட்டிட நிர்மாணத்திற்காக இரண்டாவது பட்டியலுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் பட்டியல், மொத்த பொழிப்பு பத்திரம், மற்றும் பிரதான பொழிப்பு பத்திரம் அவ்வாறே சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வேண்டும். | வேண்டும். |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆந் திகதி 08 ஆம் இலக்க பெறுகை வழிகாட்டல் கோவையில் 8.12 தொகுதியின் 5 ஆம் பிரிவு. | தலைமை அலுவலகக் கட்டிட நிர்மாணத்திற்குரிய பெறுமதி சேர் வரி கொடுப்பனவின் போது ரூபா 3,256,772 ஆன பெறுமதி சேர் வரி கொடுப்பனவு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் விபரங்கள் கணக்காய்வாள்ர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (உ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | நிலையத்தின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | 2016 ஆம் ஆண்டறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2017 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

--------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,002,071 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 7,671,395 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 14,673,466 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு மொத்த வருமானம் ரூபா 9,651,005

ஆல் குறைவடைந்தமை மற்றும் திரட்டிய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 1,891,533 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டில் நிலையத்தின் மூலம் தசாப்த முடிவு கண்காட்சிக்காக 2,500 கடலொக் அச்சிடுவதற்கு ரூபா 235,000 கூட்டுத்தொகை கொடுப்பனவு அச்சிடும் போது அந்த கட்லொக், கண்காட்சி முடிவடைவதற்கு முன்னர் அச்சிடப்பட்டு பொறுப்பேற்று அவற்றை கைப்பணியாளர்கள் அதிதிகள் மற்றும் பொதுமக்களுக்கு இடையே பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் இச் செலவினம் சிக்கனமற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது. | எஞ்சிய 2350 கட்லொக் களஞ்சியத்தில் காணப்படுவதுடன் அவற்றை எதிர்காலத்தில் பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயற்பாடு நிறைவு பெற்றவுடன் கடலொக் அச்சிட்டதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்த முடியாதிருந்தது கட்டளை வழங்கல் போதியளவு காலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | முயற்சியாளர் கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் புதிய நிர்மாணம் மற்றும் இயலளவு அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 2,700,000 ஆன நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டு 477 கைப்பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மொத்தம் ரூபா 1,500,000 செலவிடப்பட்டு 256 கைப்பணியாளர்களுக்கு பயிற்சியை வழங்கியமையால் இச் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 54 சதவீதமாக காணப்பட்டது. | செயற்படுத்தும் சந்தர்ப்பம் வரை ஏனைய வழிகளில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட பிரதேசங்களில் பயிற்சி வழங்குவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக திட்டங்களை தயாரித்து செயற்படுத்துவதற்கு கூடிய காலம் எடுப்பதால் இலக்குகள் பொருத்தமாக இருக்கவில்லை. அடையக்கூடிய இலக்குகளை திட்டமிட்டு துரிதமாக மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிலையத்தினால் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை (United Nation Development Program) செயற்படுத்தும் போது இந்நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைத்த பணத்தை நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்த நடைமுறைக் கணக்கில் எஞ்சிய நிதி ஏற்பாட்டை பயன்படுத்தி முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் பொது திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மொத்தம் ரூபா 5,731,750 தொகை நிலையத்தின் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் பின்னர் ஊக்குவிப்பு கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. | முறையான மதிப்பீட்டு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிலையத்தின் தற்போதைய பணிப்பாளர், இயக்குனர் சபையின் செயலாளராக செயற்பட்டிருந்ததுடன் 2019 மார்ச் 11 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான கணக்கு குழு கூட்டத்தின் போது 03 மாதங்களுக்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆலோசனையின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டதன் பின்னர் செயலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | பொது முயற்சிகள் மீதான கணக்கு குழு கூட்டத்தின் கட்டளையின் பிரகாரம் 03 மாத காலத்திற்குள் ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த ஆலோசனையின் பிரகாரம் உடனடியாக செயற்பட வேண்டும். |

**3.4 நிதிய குறைப்பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| செயற்திட்ட செலவினம் சரியாக முன்னரே திட்டமிடாமை காரணமாக 02 வெளிநாட்டு செயற்திட்டங்களான Oxfam மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி செயற்திட்டம் (UNDP) என்பவற்றிற்காக கிடைத்திருந்த நிதியங்களில் ரூபா 17,508,753 முதல் ரூபா 11,835,233 வரையான வீச்சிலான நிதியம் மீளாய்வாண்டின் ஆரம்ப முதல் வங்கிக் கனக்கொன்றில் ஆக்கபூர்வமான செயற்பாடொன்றுக்கு ஈடுபடுத்தாமல் விளைவற்ற வகையில் காணப்பட்டது. | இது தொடர்பாக நிர்வாக சபையுடன் கலந்துரையாடியிருந்ததுடன் அப்பணத்தை ஆக்கபூர்வமான செயற்பாடொன்றிறிஈ்கு ஈடுபடுத்துவதற்கு செயற்திட்ட அறிக்கையொன்று தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வருடக் கணக்காக நடைமுறைக்கணக்கில் இருந்து வரும் விளைவற்ற வகையிலான இப்பணத்தை ஆக்கபூர்வமான செயற்பாடொன்றுக்கு ஈடுபடுத்த வேண்டும். |

**3.5 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கேகாலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பயிலுனர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 335,272 கூட்டுப்பொறுமதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 08 தையல் இயந்திரங்கள் 2019 யூன் 12 ஆந் திகதி வரை ஆக்கபூர்வமான செயற்பாடொன்றுக்கு ஈடுபடுத்தாமல் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலையத்தின் களஞ்சியத்தில் விளைளற்ற சொத்தாக காணப்பட்டன. | இந்த 08 தையல் இயந்திரங்களை களஞ்சியப் பொறுப்பாளருக்கு கையளிக்கப்பட்டு களஞ்சியத்தில் பொறுப்பில் காணப்பட்டது. | விளைவற்ற சொத்துக்களாக காணப்படும் இந்த 08 தையல் இயந்திரங்களை பயிலுனர்களை இனங்கண்டு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 பெறுகை நடைமுறை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.1 (ஆ) பிரிவின் பிரகாரம் பெறுகை குழு நியமிப்பதற்கு வேண்டுகோள் விடுப்பதற்கு முன்னர் நிறுவனத்தால் காணி கையேற்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கையேற்காமல் நிலையத்தினால் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 30,913,819 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு முன்னர் காணி கையேற்பு மேற்கொள்ளப்படல் வேண்டும் |
| (ஆ) | மேற்படி சுற்றறிக்கையின் வழிகாட்டல் கோவையின் 4.2.3 (ஆ) பிரிவின் பிரகாரம் கேள்வி கோரி முடிவடைந்து 05 நாட்களுக்குள் ஏற்றல் கடிதம் (Letter of Acceptance) வழங்கப்பட வேண்டிய போதிலும் நிலையம் மேற்படி செயற்பாட்டிர்காக கடிதத்தை வழங்குவதற்கு 03 மாத காலம் எடுக்கப்பட்டிருந்தது. | கேள்வியை பகுப்பாய்வு செய்வதற்கு கருத்திற் கொள்ளக்கூடிய காலம் எடுப்பதால் ஏற்புக் கடிதத்தை வழங்குவதற்கு 03 மாதங்கள் அளவிலான காலம் எடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (இ) | மேற்படி சுற்றறிக்கையின் 8.9.1 (ஆ) பிரிவின் பிரகாரம் ரூபா 500,000 இனை விஞ்சும் வகையில் பொருட்கள் அல்லது சேவை ஒப்பந்தமொன்றுக்காக ஒப்பந்த உடன்படிக்கை எழுதி கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் நிலையம் தனியார் நிறுவனமொன்றுடன் | இத்தையல் இயந்திரங்களை நேரடியாக குறித்த பிரதேச செயலகங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 12,056,576 கூட்டுப்பெறுமதி செலுத்தி 304 தையல் இயந்திரங்களை கொள்வனவு செய்யும் போது எழுத்து மூல உடன்படிக்கையொன்றுக்கு வராமல் இருந்ததுடன் அந்த தையல் இயந்திரங்களை களஞ்சிய பதிவேடுகளில் பதிவு செய்யப்படாமல் பிரதேச செயலகங்களுக்கு 2018 ஏப்ரல் மற்றும் யூன் மாதங்களில் கையளிக்கப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | மேற்படி இரண்டாவது பட்டியலுக்கு கொடுப்பனவு செய்த போது ரூபா 506,417 பெறுமதிக்குரிய விலை விலகல் பதிவேடு மதியுரை நிறுவனத்தின் உத்தியோகத்தரால் தயாரித்தல், பரீட்சித்தல் மற்றும் சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மதியுரை நிறுவனத்தின் மூலம் இது தொடர்பாக விசாரிக்கப்பட்டதுடன் கொடுப்பனவு சான்றுறுதிப்படுத்துவதன் மூலம் எஞ்சிய அனைத்து ஆவணங்களும் துணை ஆவணங்கள் என பதிலாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் சகல பதிவேடுகள், பட்டியல்கள் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படவேண்டும். |

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 113 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 84 ஆக இருந்தது. அதன் பிரகாரம் உள்ளபடியான பதவியணியினருடன் ஒப்பிடும் போது இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டத்தின் பதவியணியில் 25 பேரான பற்றாக்குறையொன்று காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டதுடன் இப்பதவியில் பற்றாக்குறை உள்ளக கணக்காய்வு போன்ற பிரிவு செயலற்று போவதற்கு காரணமாக இருந்தது. | ஆண்டின் இறுதியில் ஊழியர் ஓய்வு பெறல் மற்றும் கேட்டு விலகுதல் காரணமாக வெற்றிடங்கள் பல காணப்பட்டன. தேர்தல்கள் காரணமாக ஆட்சேர்ப்பு வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் கருத்திற் கொள்ளக் கூடிய தாமதங்கள் ஏற்பட்டன. தற்போது தகைமையுடையவரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்காக பொருத்தமான பதவியணியை ஆர்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்காக 2017 நவம்பர் மாதம் உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 07 ஆந் திகதி முதல் அந்த உத்தியோகத்தர் சேவையிலிருந்து விலகியிருந்தார். அப்பிரிவிற்காக பதவியணி இணைக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு பதவிக்காக நிரந்தரமாக ஒருவரை ஆட்சேர்ப்பு செய்யும் வரை நிறுவனத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர் பதில் கடமை புரிவதற்கு 2019 சனவரி 21 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். இதன் காரணமாக மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் உள்ளக கணக்காய்வு செயற்பாடு நிறைவேற்றப்பட்டி ருக்கவில்லை. | தற்போது பதில் கடமை புரிவதற்கு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பதற்கும் இப்பிரிவிற்காக முகாமைத்துவ உதவியாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உள்ளக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |